


ஒரு அபார்ட்மெண்ட் வாடகைக்கு எடுக்கப்பட்டாகிவிட்டது. வீட்டுக்கார கோயிந்தசாமிக்கு எந்தச் சந்தேகமும் இல்லை. பரம செளக்கியமாகத் தீவிரவாதம் வளர்ப்பதில் ஒரு பிரச்னையும் இல்லை. அடுத்தபடியாக?

ஒரு விஷயம். அல் காயிதா ஒரு போதும் சும்மா உட்கார்ந்து பொழுதுபோக்குவதற்காகவோ, டி.வி.டி.யில் படம் பார்த்து என்ஜாய் பண்ணுவதற்காகவோ அபார்ட்மெண்டை வாடகைக்கு எடுப்பதில்லை. ஒரு ஆபரேஷன் முடிவானால் மட்டுமே அபார்ட்மெண்ட் காண்டம் ஆரம்பிக்கும். ஆகவே, வீடு பார்த்து செட்டில் ஆன மறுகணமே, வேலையை ஆரம்பித்துவிடுவார்கள்.

ஏதோ ஓரிடத்தில் குண்டு வைக்கிற அசைன்மெண்ட் என்று ஓர் உதாரணத்துக்கு எடுத்துக்கொள்ளுங்கள். திட்டத்தின் வேறு வேறு கட்டங்களில் பணியாற்றக் குறைந்தது பத்துப் பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பார்கள். இந்தப் பத்துப் பேரும், பத்து வேறு வேறு இடங்களில் வீடு வாடகைக்கு எடுத்துத் தங்கவேண்டும். இது முதல் உத்தரவு.

திட்டத்தின் கமாண்டராக நியமிக்கப்பட்டிருப்பவர், எந்த இடத்தில் குண்டு வைக்கப் போகிறார்களோ, அதற்குக் கொஞ்சம் பக்கத்தில் ஃப்ளாட் பார்த்திருப்பார். அதுதான் தலைமை அலுவலகம். அந்த இடத்தில் அந்த கமாண்டரைத் தவிர, வேறு யாரும் இருக்கமாட்டார்கள். ஆனால், போராளிகளுக்கான அறிவுரை வகுப்புகள், என்ன செய்யவேண்டும், எப்படிச் செய்யவேண்டும் போன்ற பாட வகுப்புகளெல்லாம் அங்கேதான் நடைபெறும்.

எப்படி? மொத்தமாக வரவழைத்தா? சான்ஸே இல்லை. ஒரு நாளைக்கு ஒருத்தர்தான் வரலாம். அவருக்கு அன்று முழுக்கப் பாடங்கள் நடக்கும். பாடம் முடிந்ததும் கிளம்பிப் போய்விட வேண்டும். மறுநாள் இன்னொரு போராளி வருவார். அடுத்த நாள் வேறொருவர்.

கடைசி நாள் வரை யார் யார் திட்டத்தில் சம்பந்தப்படுகிறார்கள் என்பது யாருக்கும் தெரியாது, அந்த கமாண்டர் ஒருத்தரைத் தவிர.

ஆனால் தியரிடிகலாக, நீ என்ன செய்யவேண்டும், நீ எங்கே போகும்போது யார் வந்து உன்னுடன் எப்போது சேர்ந்துகொள்வார்கள், எப்படி அவனை அடையாளம் கண்டுகொள்வது, அவனது பங்கென்ன, உன் வேலை என்ன என்று அக்கு அக்காக விளக்கிச் சொல்லப்பட்டிருக்கும்.

யாரோ தன்னுடன் வரப்போகிறார்கள்; தான் மட்டும் தனியே செய்யப்போவதில்லை என்பது மட்டும்தான், ஒவ்வொரு போராளிக்கும் தெரியும். ஆனால், யார்? எப்போது வருவார்? எங்கிருந்து முளைப்பார்? தெரியாது. கடைசிக் கணம் வரை தெரியாது. அப்படி வருபவர்கள், முன்பின் அறிமுகமானவர்களாக இருக்கவே மாட்டார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு தேசம். ஒவ்வொரு

பிராந்தியம். செயல் மட்டும்தான் ஒன்று. உத்தரவிடும் தலைமை ஒன்று. அவ்வளவுதான்.

அல் காயிதாவின் இந்தப் பயிற்சிக் கையேட்டில், இரண்டு பேர் ஒரு அபார்ட்மெண்டில் கூடிப் பேசும்போது, எப்படிப் பேசவேண்டும் என்பது பற்றிக்கூட விரிவாக எழுதப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு முறை பேச்சைத் தொடங்கும்போதும் சுற்றுமுற்றும் நன்றாக நோட்டமிடு. யாராவது உன்னை கவனிக்கிறார்களா? கதவு, ஜன்னல்கள் சரியாக மூடப்பட்டிருக்கிறதா? வீட்டுக்குள் தேவையற்ற ஒயர்கள் ஏதும் கிடக்கிறதா? ஒட்டுக்கேட்கும் கருவிகள் ஏதும் இருக்கப்போகிறது, ஜாக்கிரதை!

பேச்சைத் தொடங்குமுன் கமாண்டர், பாதுகாப்பு சிக்னல் தரவேண்டும். சுற்று வட்டாரத்தை நன்கு நோட்டமிட்டு, கவனித்துவிட்டு, ஒன்றும் ஆபத்தில்லை என்று தெரிந்த பிறகே, 'என்ன மாப்ள சௌக்கியமா?' என்று கேட்கவேண்டும்.

அப்புறமும் கூட, நேரடியாக விஷயத்துக்கு வந்து, "என்ன குண்டு வெக்கப்போறோம் இப்பம்? ஆர்.டி.எக்ஸா? எத்தினி கிலோ?" என்றெல்லாம் அபத்தமாகப் பேச்சைத் தொடங்கக் கூடாது.

கூடுமானவரை மிகத் தாழ்ந்த குரலில், சங்கேத மொழியில் மட்டுமே பேசவேண்டும். உதாரணமாக, குண்டு என்கிற வஸ்துவை மிகச் சுலபமாகத் தக்காளிப் பழத்தின் தலையில் ஏற்றி வைக்க முடியும். (அல் காயிதா பல சந்தர்ப்பங்களில் கையாண்ட சங்கேதச் சொல் இதுதான்.)

இரண்டு தக்காளி வியாபாரிகள் பேசிக்கொள்வது போலவே, ஒரு முழு குண்டுவெடிப்புத் திட்டத்தையும் பேசி விளக்கி / விளங்கிக்கொள்ள முடியும்.

"மார்க்கெட்டுல நல்ல கூட்டம் பங்காளி."

"ஆங்.. நான் காலீல பத்து மணி கணக்கா தக்காளி எடுத்துட்டுப் போயிருவேன்."

"ஐய.. தலமேல வெச்சா கொண்ட்டு போவ? பாண்டிபஜார் சிங்காரம் வண்டி எட்த்தாரேன்னான். மெயின் கேட்டாண்ட போய் நின்னன்னா, நீலக்கலரு சைக்கிள் ரிக்ஷா வரும். ஏத்திக்கினு போவியா.."

"சிங்காரம் லோடு அடிப்பானான்ன?"

"அவன் அசிஸ்டெண்டு ஒருத்தன் ஜாபர்கான்பேட்ட பக்கமா வந்து ஏறிக்குவான். ரெண்டு பேரும் நல்லா சைக்கிள் ஓட்டுவாங்க. நீ கவலையே படாத."

"கூலி?"

"அட, அவவன் கூலிய ஆண்டவன் குடுப்பாம்பா. நமக்கெதுக்கு அதெல்லாம்? போனமா? சரக்க வித்தமா? நடைய கட்னமான்னு இருக்கணும்."

"வூட்டுக்குப் போவச்சொல்ல இருட்டிறாது?"

"பத்தேமுக்காலுக்கு நம்ம ஐயப்பன், அந்தாப்ல லோடு எறக்கிட்டு வருவான். அவன் வண்டில ஏறி, நீ காவாங்கர பக்கம் போயிரு. நாஷ்டா துன்னுட்டு ரெஸ்ட் எடு. அங்க நம்ம சகல நீலகண்டன் இருக்கான்ல? அவன் வூட்டாண்ட தங்கிக்க. பச்ச கலரு மச்சு வூடுப்பா.. ஒனக்குத் தெரியுமே..?"

"ஆங்.. ஒருக்கா போயிருக்கேன்.."

“அதேதான். அங்க ஒனக்குச் சௌகரியமா இருக்கும். போய்க் கொஞ்சநேரம் குந்திக்க. வெய்யத்தாழ பசங்கள அனுப்பறேன். வலைய எடுத்துக்கிட்டு காவாப்பக்கமா வந்து சேரு. போட்டுங்க இருக்கும். பாத்துக்குவம்..”

மேற்படி உரையாடலில் உங்களுக்குக் கொஞ்சம் விவரம் புரிவது போலிருக்கும். நமது புரிதல் சௌகரியம் கருதி சென்னைத் தமிழில், நமக்குப் பரிச்சயமான இடங்கள், பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதே உத்தியை, அமெரிக்கா முதல் அண்டார்டிகா வரை எந்தப் பிராந்தியத்துக்கும் பயன்படுத்துவதுதான் அல் காயிதாவின் ஸ்டைல்.

ஒரு அபார்ட்மெண்டில் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் கூடிப் பேசுகிறபோது, கடைப்பிடிக்கவேண்டிய மிக முக்கியமான ஒழுக்க விதி, ‘மொத்தமாக ஒருபோதும் வெளியே போகாதீர்’ என்பது. ஒவ்வொருவராகத்தான் பிரிய வேண்டும். போதிய அவகாசம் விட்டு. அப்படி வெளியே போகிறவர்களும் ஒரே திசையில் போகக்கூடாது. நேராக மெயின் ரோடுக்குப் போய்விடக் கூடாது. குறைந்தது, நாலைந்து சந்துகளையாவது சுற்றிக்கொண்டுதான் தங்கள் வழிக்குப் போகவேண்டும். இதைவிட முக்கியம், வெளியிலிருந்து வருபவர் என்ன கொண்டுவந்தாலும், கையோடு எடுத்துச் சென்றுவிட வேண்டும். அபார்ட்மெண்ட் வளாகத்தில், சந்தேகத்துக்கு இடமாக ஒரு பிஸ்கட் பொட்டலத்தைக் கூட விட்டுச் செல்லக்கூடாது என்கிறது இந்தக் கையேடு.

அதே மாதிரி பயணம். ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குப் போவது குறித்த பால பாடங்கள் நிறையச் சொல்கிறார்கள். கூடுமானவரை மாநகரப் பேருந்துகளையே பயன்படுத்துங்கள். அல்லது மின்சார ரயில். அதுவும் புறப்படுகிற இடத்தில் ஏறாதீர்கள். செக்கிங் தொல்லைகள் இருக்கும். ரயில் அல்லது பஸ் புறப்படும் இடத்திலிருந்து ஒன்று அல்லது இரண்டு ஸ்டேஷன்கள் வரை நடந்துபோய் அங்கிருந்து ஏறுவதே நல்லது.

ஏதாவது முக்கிய ஆவணங்களை எடுத்துச் செல்வதென்றால், பாதுகாப்பு விஷயத்தில் மிகவும் கவனமாக இருக்கச் சொல்கிறது இந்தக் கையேடு. எதையோ பாதுகாப்பாக எடுத்துச் செல்கிறான் இந்த ஆசாமி என்று தோன்றாத வண்ணம் எடுத்துச் செல்வதே பாதுகாப்பு!

பெரிய பெரிய லக்கேஜ்களை ரயிலில் எடுத்துப் போகவேண்டி வந்தால், லக்கேஜை வேறு கம்பார்ட்மெண்டில் பயணிகள் லக்கேஜோடு லக்கேஜாக வைத்துவிட்டு, போராளி வேறொரு கம்பார்ட்மெண்டில் ஏறிக்கொள்ள வேண்டுமாம். பெட்டி மாட்டினாலும் போராளி தப்பிவிடுவான். போராளி மாட்டினால் பெட்டி தப்பிவிடும்!

அது எப்படி?

ஒரு போராளி, முக்கிய ஆவணங்கள் அல்லது பொருள்கள் அடங்கிய லக்கேஜுடன் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குப் பயணம் செய்கிறான் என்றால், அவனுக்கும் லக்கேஜுக்கும் தனித்தனியே பாதுகாப்பு ஆட்கள் போவார்கள். அவர்களைச் சம்பந்தப்பட்ட போராளிக்குத் தெரியாது. ஒன்றும் பிரச்னை இல்லாமல் நல்லபடியாகப் போய்ச் சேர்ந்து பெட்டியை இறக்கிவிட்டால், கடைசி வரை கூடத் தனக்குப் பாதுகாப்புக்கு வந்திருக்கும் தோழர் யார் என்று சம்பந்தப்பட்ட போராளிக்குத் தெரியாமலேயே இருந்துவிடும்.

ஒருவேளை பிரச்னை என்றால், போராளி முக்கியமா, பெட்டி முக்கியமா என்று முதலில் தீர்மானிப்பார்கள். பெட்டிதான் முக்கியம் என்றால், அதை எப்படியாவது காப்பாற்றிவிடுவார்கள். போராளி தான் முக்கியம் என்றால், அவன். இதையெல்லாம் எங்கிருந்து யார் கவனித்துக்கொண்டிருக்கிறார்கள், எப்படி நொடிப்பொழுதில் நடவடிக்கைகள் நிகழ்கின்றன என்று யாருக்குமே தெரியாது.

இதுவே ஒரு தற்கொலைத் தாக்குதல் திட்டம் என்றால், இந்த அமைப்பு, செயல்பாடுகள், திட்டமிடுதல், கால்குலேஷன் எல்லாமே வேறு. முற்றிலும் வேறு.

ஓரிடத்தில் ஒரு தற்கொலைத் தாக்குதல் நடத்த முடிவு செய்யப்படுகிறது என்றால், அதற்கான ஆட்களைத் தேர்ந்தெடுப்பதிலிருந்தே அல் காயிதா முற்றிலும் புதிய பாடங்களை அறிமுகப்படுத்திவிடுகிறது. தாக்குதல் தினம்தான் நமக்குச் செய்திகளின் வழியே அறிமுகமாகிறது. அதற்கு முன்னால் எத்தனை நாட்கள், எத்தனை வார, மாதங்கள் சமயத்தில் வருடங்கள், அதற்கான திட்டங்கள், பயிற்சிகள் நடைபெறுகின்றன என்பது தெரிந்தால் வாயடைத்துப் போவீர்கள்.

ஒரே ஒரு சம்பவத்தை மட்டும் சற்றே விரிவாகப் பார்க்கலாம். ரொம்பப் பழைய சம்பவம்கூட வேண்டாம். நமக்கு மிகப் புதிதாக நினைவில் இருக்கக்கூடிய ஒரு சம்பவத்தையே எடுத்துக் கொள்ளலாம்.

ஜூலை 7, 2005. இங்கிலாந்தின் தலைநகரமான லண்டன் நகரம். நல்ல கூட்டம் வழியும் காலை நேரம். மணி சரியாக 8.50.

மக்கள் பரபரப்பாக அலுவலகங்களுக்குப் போய்க்கொண்டிருந்தார்கள். எப்போதும்போல் அன்றும் லண்டன் பாதாள ரயில்களில் நல்ல கூட்டம் முண்டியடித்துக்கொண்டிருந்தது.

அப்போதுதான் அந்த முதல் குண்டு வெடித்தது. வெடித்தது குண்டுதானா என்று தெரிவதற்குள்ளாகவே (ஐம்பது வினாடி இடைவெளியில்) அடுத்த குண்டு. இதுவும் குண்டு தானா என்று எண்ணிப்பார்ப்பதற்குள் (இன்னொரு ஐம்பது வினாடி) மேலும் ஒரு குண்டு.

எத்தனை உயிர்கள்! எத்தனை நசுங்கல்கள்! அச்சத்தில், கலவரத்தில் மக்கள் அங்கும் இங்கும் தலை தெரிக்க ஓடிக்கொண்டிருக்க, காவல் வாகனங்களின் சைரன் ஒலி காற்றை நிறைக்கிறது. அத்தனை பேர் கவனமும் பாதாள ரயில் நிலையத்தில் பதிந்திருக்க, சாவகாசமாக ஒரு முக்கால் மணி நேர இடைவெளிவிட்டு (டீ சாப்பிட்டு வரப் போயிருப்பார்கள் போலிருக்கிறது.) டாவிஸ்டாக் சதுக்கம் என்கிற இடத்தில் ஒரு பேருந்தில் அடுத்த குண்டு வெடிக்கிறது.

நான்காவது குண்டு. ஒரே நாள். ஒரே மணி நேர இடைவெளியில். சர்வ வல்லமை பொருந்திய இங்கிலாந்து தேசத்தின் தலைநகரத்தில். மாட்சிமை பொருந்திய மகாராணியாரும் மரியாதைக்குரிய இளவரசரும் அலறி அடித்துக்கொண்டு எழுந்து உட்கார, பிரதமர் டோனி ப்ளேயர் செய்வதறியாமல் பதற்றத்தில் பல்லைக் கடித்துக்கொண்டிருந்தார்.

செய்தது அல் காயிதா. எப்படிச் செய்தார்கள்? பார்க்கலாம்.